2023

முத்தரசி

கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

# புறநானூறு : மன்னன் மக்கள் உறவு

**முனைவர். நீ.காஞ்சனா,**
**உதவிப் பேராசியர் - தமிழ்த்துறை,**
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ், கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மயிலம் - 604 304.

சங்கக் கடலில் புறநானூறு என்னும் நூல் வரலாற்றுப் பெட்டகமாக விளங்குகிறது. இதன்கண் வீரம், கொடை இருகண்களாகப் போற்றப்பட்டுள்ளது. சங்க காலத்தில் மன்னராட்சி நிலவியது. சங்கத்தின் தலைவனாக மன்னனையே சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது. மன்னனுக்கு என்று சில கடமைகளைப் புலவர்கள் வரையறுத்துள்ளனர். அது மட்டுமல்லாது உலகுக்கு உயிர் போன்றவன் மன்னன் என்பதை,

***"மன்னன் உயிர்த்தே மலர்தலை உயகம்"***

*-(புறம் - 186:2)*

என்ற பாடல் வரி புலப்படுத்துகிறது. அவ்வகையில் புறநானூற்றில் மன்னனுக்கும் மக்களுக்குமான உறவு முறையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## வஞ்சினம் கூறுதல் :

பகைவரைத் தாழ்வித்தல் பொருட்டு இவ்வாறு செய்வேன் என அரசன் ஒருவன் சொல்லிய கூறுபாட்டைச் சொல்லுதல் வஞ்சினக்காஞ்சி ஆகும்.

**"இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத்**
**துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்"**[1]

என்று இன்னவாறு செய்தலைப் பிழைத்தேனாயின் இவ்வாறு ஆவேன் என்று வஞ்சினக் காஞ்சியைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

"மனிதனுக்கு ஏற்படும் அடிப்படையான உணர்வுகளில் சினமும் ஒன்றாகும். சினத்தை விளக்கும் முறையில் வள்ளுவர் 'வெகுளாமை' என்றே ஓர் அதிகாரம் வகுத்தார். 'சினமென்னும் சேர்ந்தாரைக்கொல்லி' என்றார் அவர். சினத்தின் உச்சி நிலையில் மனிதர்கள் சூளுரை கூறுகின்றனர். நான் இதைச் செய்வேன்; செய்யேனாயின் இவ்வாறு ஆவேன் என்று கூறுகின்ற முறையில் இம்மொழி அமைகிறது. இதை 'வஞ்சினம்' என்று முற்கால இலக்கியங்களும் 'சபதம்' என்று பிற்கால இலக்கியங்களும் கூறுகின்றன. தம் ஆண்மையை இழித்துரைக்கும் பொழுதும், தன்மானத்துக்கு இழுக்கு நேரும் பொழுதும், பழி ஏற்படும் பொழுதும், பழக்குப் பழி வாங்க நினைக்கும் பொழுதும்

SAMPLE

வஞ்சினம் கூறுகின்றனர்''[2] என்று சரளா இராசகோபாலன் அவர்களின் விளக்கம் வஞ்சினம் தோன்றும் சூழல்களைத் தெளிவுபட எடுத்துரைக்கின்றது.

புறநானூற்றில் வஞ்சினக்காஞ்சித் துறையில் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியப் பாண்டியன், நலங்கிள்ளிச் சோழன் ஆகிய மூன்று பேரரசர்கள் வஞ்சினம் உரைத்ததாக மூன்று பாடல்கள் (புறம் 71, 72, 73) உள்ளன. இப்பாடல்களில் நான் இதை செய்வேன்; செய்யேனாயின் இவ்வாறு ஆவேன் என்ற முறைமையைக் காண முடிகிறது.

சேரனும், சோழனும் பெருஞ்சினத்துடன் போரிட வரும் செய்தி கேட்டு ஒல்லையூர் தந்த பாண்டியன், போரின்கண் பகைவரைப் புறங்காணச் செய்வேனாயின் என் தேவியைப் பிரிவேனாக! குறை விளக்கி முறை கேட்டு என்னிடம் வந்தார்க்கு முறை செய்து காப்பாற்றும் இறையாக நானில்லாது கொடுங்கோலானாகுக! என வஞ்சினம் உரைக்கின்றான்.

***"பேரமர் உண்கண் இவளினும் பிரிக;***

***அறன்நிலை திரியா அன்பின் அவையத்துத்***

***திறன்இல் ஒருவனை நாட்டி, முறைதிரிந்து***

***மெலிகோல் செய்தேன் ஆகுக;"***

***(புறம் - 71: 6-9)***

என்னும் பாடலில் அவ்வஞ்சினமொழியை அறிய முடிகிறது. மேலும், தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்,

"***குடிபழி தூற்றுங் கோலே னாகுக"***

***(புறம் - 72:13)***

என்று வஞ்சினம் கூறுகிறான். மேற்குறிப்பிட்ட இரு பாடல்களில் வஞ்சினம் கூறுமுகத்தான், மக்கள் துன்பமின்றி வாழுமாறு செங்கோலனாக வாழ விரும்பிய அவனுடைய உயர் பண்பை அறிய முடிகிறது.

**<u>ஊழின் தன்மையும் அரசவுரிமையும்:</u>**

அரச உரிமை வழிவழியாக வந்தது. அன்று தேர்தல் களம் இல்லை. தந்தைக்குப் பின்னர் மகன் பட்டத்திற்கு வருவதே முறைமையாக இருந்திருக்கிறது. அரசருக்கு ஆண் குழந்தை இல்லாத காலத்தில்தான் இவ்வழக்கம் தவறியிருப்பதை அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக சோழர் பரம்பரையில் வேல்பல் தடக்கை பெருவிரல் கிள்ளியின் ஆட்சி வரை கிள்ளி பரம்பரையினரே உறந்தையிலிருந்து ஆண்டு வந்தனர். அவனுக்குப் பின்

SAMPLE

சென்னிப் பரம்பரையைச் சேர்ந்த உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி அரசனான். இம்மாற்றம் வேல்பல் தடக்கை பெருவிறல் கிள்ளிக்கு ஆண்மகவு இன்மையால் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

அரசாட்சி என்பது ஊழால் வரக்கூடிய ஒரு செல்வமென்றும், அதனைத் தகுதி சிறிதும் இல்லாதவனும் பெறுதற்கு வாய்ப்புண்டு என்பதை,

***"மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்***

***பால்தர வந்த பழவிறல் தாயம்"***

*(புறம் - 75:12)*

என்னும் பாடல் விளக்குகிறது.

**<u>சான்றோர் பாராட்டும் பழிப்பும்</u>**

நன்னெறிக்கண் நின்று ஆண்ட மன்னர்களைச் சான்றோர் உலகம் போற்றி மகிழ்ந்தும், செங்கோல் ஆட்சி செலுத்தாத மன்னர்களைப் பழித்தும் உள்ளனர்.

"***அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே***

***திறவோர் புகழ்ந்த திண்ணான் பின்னே"***

*(புறம் 221:3-4)*

என்ற பாடலில் அறநெறி வழுவாது ஆண்ட கோப்பெருஞ்சோழனைச் செங்கோலனாகப் பாராட்டியுள்ளார். மற்றொரு பாடலில்,

***"நன்னன் மருகன் அன்றியும் நீயும்***

***முயங்கற்கு ஒத்தனை மன்னே"***

*(புறம் 151:8-9)*

என்று பெண் கொலை புரிந்த மன்னன் நன்னனைப் பழித்துள்ளதைக் காண முடிகிறது. இவ்வாறு அரசன் செங்கோல் நெறியிலிருந்து தவறாது நின்று மக்களைக் காக்கும் பொருட்டு மக்கள் அவனைப் பாராட்டியும் அந்நெறியிலிருந்து பிறழ்ந்து நிற்கும் பொழுது அவன் தவற்றைச் சுட்டிக்காட்டிப் பழித்த நிலையில் மக்கள் இருந்துள்ளனர் என்பதையும் உணர முடிகிறது.

**<u>மன்ன் - மக்கள் உரிமை</u>**

SAMPLE

மன்னன் செங்கோல் நிலை தவறும் போது ஒருபுறம் அவனைப் பழித்திருந்தாலும்கூட மக்கள் கண்ணீர்விட்டு புலம்பினரே அன்றி மன்னனை ஆட்சியிலிருந்து இரக்கும் உரிமை அவர்கட்கு இல்லாமலிருந்தது என்பதை,

*"கொடியெனம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்*

*குடிபழி தூற்றும் கோலே ளாகுக"*

*(புறம் 72: 11-12)*

என்ற பாடல் உணர்த்துகிறது. இக்கருத்தினை ஒத்ததாகவே,

***"அலவுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள் வெ.்.கிக்***

***கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழ்***

***லுலகுபோ லுலறிய வுயர்மர வெஞ்சுரம்"***[3]

என்னும் கலித்தொகைப் பாடல் உணர்த்துகிறது.

மேலும், வள்ளுவரும்,

***"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே***

***செல்வத்தைத் தேய்க்கும் படை"***[4]

என்று வலியுறுத்தியுள்ளார்.

**<u>அறிவுடை வேந்தனது அரசியல்</u>**

அரசனின் கடமை குடிமக்களைப் பேணுவது ஆகும். மக்களைப் பேணுவதற்கு மன்னனுக்குப் பொருள் தேவைப்படுகிறது. இத்தகைய தேவைக்கென வாங்குவதே வரி ஆகும். குடிமக்களின் நிலை அறிந்து இயல்பு அறிந்து வரிவசூல் செய்தனர்.

அறிவுடைய வேந்தன் அறநெறியறிந்து குடிமக்களிடம் வரி வாங்கினால், கோடிக்கணக்கான செல்வம் பெற்று அவன் இன்புறுவதுடன் அவனது நாடும் செழிக்கும் என்று பிசிராந்தையார் அறிவுறுத்தியுள்ளார்.

***"அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே***

***கோடியாத்து நாடுபெரிது நந்தும்"***

*(புறம் 184: 5-6)*

என்ற பாடலடிகள் மெய்ப்பிக்கிறது.

SAMPLE

அரசன் குடிகள் தரும் இறைப்பொருள் ஒன்றையே நம்பி வாழாது தன் வலிய முயற்சியால் அரசின் வருவாயைப் பெருக்க வேண்டும் என்பதை,

***"குடிபுறவு இரக்கும் கூரில் ஆண்மைச்***

***சிறியோன் பெறின்அது சிறந்தன்று மன்னே!"***

*(புறம் 75: 4-5)*

என்னும் பாடல் புலப்படுத்துகிறது.

**மன்னன் - மக்கள் உறவு**

அரசனை இழந்த நாடு தாயில்லாக் குழந்தை பசியால் ஓயாது கூப்பிடுவது போன்று, துயரம் உற்றுப் புலம்பும் நாடாகும் என்பதை,

***"தாயில் தூவாக் குழவி போல,***

***ஓவாது கூஉம், நின் உற்றியோர் நாடே"***

*(புறம் 4: 18-19)*

என்றும், மேலும் பெற்ற தாய் குழந்தையைப் பேணுவது போல் நாட்டைப் பேணிக் காத்தற்கு உவமை கூறியுள்ளார் நரிவெரூத்தலையார். இதை,

***"குழவி கொள்பவரின் ஓம்புமதி!"***

*(புறம் 5:7)*

என்னும் பாடலடி மூலம் அறியலாம்.

குழந்தைகள் தாயையும் தந்தையையும் நம்பி வாழ்வது போல மக்கள் மன்னனை நம்பி வாழ்ந்தனர். மன்னன் தாள் நிழலில் குடிகள் வாழ்வதை,

***"என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது"***

*(புறம் 72: 10)*

என்னும் பாடலடி மெய்ப்பிக்கும். மேற்குறிப்பிட்ட பாடல்களின் மூலம் மன்னனைத் தாயாகவும் தந்தையாகவும் கருதி வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

- மக்கள் துன்பமின்றி வாழ செங்கோல் ஆட்சி செலுத்த மன்னன் விரும்பினான் என்பதை வஞ்சினப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

SAMPLE

முத்தரசி
ஆய்விதழ்
2023
முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

★ மக்களுக்கு மன்னனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இல்லை. தந்தைக்குப் பின் மகன் பட்டத்திற்கு வருவதே முறைமையாக இருந்திருக்கிறது.

★ மன்னன் செங்கோல் ஆட்சி செலுத்திய பொழுது மக்கள் புகழ்ந்தும், செங்கோல் ஆட்சி நெறியில் இருந்து தவறிய பொழுது பழித்தும் உள்ளனர். அவ்வாறு பழித்திருந்தாலும் மன்னனை ஆட்சியிலிருந்து இரக்கும் உரிமை மக்களுக்கு இல்லை என்பதை அறிய முடிகிறது.

★ மன்னன் மக்களிடம் அதிகமாக வரிவசூல் செய்யும் போது மன்னனுக்கு அறிவுறுத்துபவர்களாகப் புலவர்கள் இருந்துள்ளனர். மன்னனைத் தாயாகவும் தந்தையாகவும் கருதி மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது.

**<u>அடிக்குறிப்புகள்</u>**

1. தொல்.புறத்.நூ.எண்.77
2. சரளா இராசகோபாலன், புறநானூற்றுக்காட்சிகள், பக்.52
3. கலித்.10:5-7
4. குறள். 555.

SAMPLE